69901

மேலும், சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க திரு. எஸ். அக்னிராஜு அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ii). சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவை உறுப்பினர்களைச் சேர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சட்ட மேலவையின் ஐந்து உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தீர்மானம் ஒன்றை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"1968-69-ம் ஆண்டுக்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் சேர்த்துக்கொள்வதற்கென, ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்து, அவ்வாறு நியமனம் செய்த உறுப்பினர்களின் பெயர்களை, பேரவைக்கு அறிவிக்குமாறு, இப்பேரவை, சட்ட மேலவைக்கு பரிந்துரை செய்கிறது."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

11. அரசினர் மசோதாக்கள்

(i) தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (ச. பே. மசோதா எண் 2-68)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் மசோதாக்கள். தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (ச. பே. மசோதா எண் 2/68) வை, மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill *, 1968 (L.A. Bill No. 2 of 1968) be taken into consideration ".

Sir, under item 62 of the First Schedule to the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 199),5 sugarcane was liable to a single point tax of four per cent at the point of last purchase in the State. The Government decided to increase the rate of tax to seven per cent. The increase is expected to fetch an approximate additional revenue of Rs. 21 lakhs per annum to the Government.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 19th February 1968.